பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**12 02 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் ரயில் வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டதன் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் டீசல் பயன்பாடு 62 சதவீத அளவிற்கு குறைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. மக்களவையில் விவாதத்தின்போது ஆதாரமற்ற தகவல்களை அளித்து அவையை திசைதிருப்ப முயன்றதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி மீது உரிமை மீறல் நோட்டீஸ் வழங்கப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் துறைமுகம் சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டிடம் மற்றும் எரிசக்தி சேமிப்புக்காக பிளாட்டினம் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

4. பங்களாதேஷில் நாடாளுமன்ற தேர்தல் இன்று நடைபெறுகிறது.

5. ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அத்ரியான் கர்மாகர் தங்கப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டில் ரயில் வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டதன் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் டீசல் பயன்பாடு 62 சதவீத அளவிற்கு குறைந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், கடந்த நிதியாண்டில் டீசல் பயன்பாடு 178 கோடி லிட்டர் குறைந்ததாக தெரிவித்தார்.

25 மாநிலங்களில் ரயில்வழித்தடங்கள் 100 சதவிதம் மின்மயமாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 2 ஆண்டுகளில் 10 ஆயிரத்து 932 கிலோ மீட்டர் தொலைவிற்கு ரயில் வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், 57 ஆயிரத்து 200 குளிர்சாதன வசதி இல்லாத பெட்டிகள் மற்றும் 54 லட்சம் இருக்கைகள் மூலம் ஆண்டிற்கு 720 கோடி பயணிகள் எளிதாக தங்கள் பயணத்தை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

நடப்பு நிதியாண்டின் முதல் **9** மாதங்களில் **245** புதிய ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், **101** சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ரயில் கட்டணத்தைப் பொறுத்தவரை உலக அளவில் மற்ற நாடுகளைவிட இந்தியாவில் மிகக் குறைவு என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மக்களவையில் மத்திய பட்ஜெட் குறித்த விவாதத்தின்போது அடிப்படை ஆதாரமற்ற தகவல்களை அளித்து அவையை திசைதிருப்ப முயன்றதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்திக்கு எதிராக பிஜேபி உரிமை மீறல் நோட்டீஸ் வழங்கும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு எதிராக பயனற்ற தவறான குற்றச்சாட்டுகளை திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

எந்த அறிவிப்பும் வழங்காமல் மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி மீதும் திரு. ராகுல் காந்தி குற்றச்சாட்டுகளை கூறியதாக திரு. கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா மீது காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள் அளித்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த நோட்டீஸ் குறித்து பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வில் பரிசீலிக்கப்படும் என்று மக்களவை செயலகம் அறிவித்துள்ளது.

நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த நோட்டீசில் சில குறைபாடுகள் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிகழ்ந்த 4 சம்பவங்கள் குறித்து நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், விதிகளின்படி இதை நிராகரிக்க முடியும் என்றும் அது கூறியுள்ளது.

எனினும் தமக்கு எதிராக அளிக்கப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீசில் உள்ள குறைபாடுகளை சரிசெய்து நடைமுறைகளின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்களவைத்

தலைவர் திரு. ஓம்பிர்லா மக்களவை செயலகத்தை அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் எந்த மாநிலத்திற்கும் வரிப் பகிர்வு குறைக்கப்படவில்லை என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

மாநிலங்களுக்கான வரிப் பகிர்வு குறைக்கப்பட்டுள்ளதாக கூறிய எதிர்க்கட்சி உறுப்பினர்களின் குற்றச்சாட்டுகளுக்கு அவர் மறுப்பு தெரிவித்தார்.

இந்த ஆண்டு மாநிலங்களுக்கு வரிப் பகிர்வாக 25 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை உள்ளிட்ட தொழில்துறை நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீடும் குறைக்கப்படவில்லை என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ரோல்ஸ் ராய்ஸ் தலைமைச் செயல் அதிகாரி திரு. **Tufan Erginbilgic** உடன் நேற்று உரையாடினார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், நாட்டின் சக்திமிக்க இளைஞர்களுடனும், புதுமைக் கண்டுபிடிப்புகளுடனும் இந்தியாவில் ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனம் தங்களது நிறுவன நடவடிக்கைகளை மேம்படுத்துவதை வரவேற்பதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

தேசிய கீதம் பாடுவதற்கு முன்பாக வந்தே மாதரம் பாடலை பாட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன்படி குடியரசுத்தலைவரின் வருகை, தேசியக்கொடியை பறக்கவிடுதல், ஆளுநர்கள் உரை வாசித்தல் உள்ளிட்ட நிகழ்வுகளில் தேசிய கீதத்தின் முன்பாக வந்தே மாதரம் பாடலின் 6 சரணங்களை பாட வேண்டும் அல்லது ஒலிக்கச் செய்ய வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய வானொலி - ஆகாஷ்வானி மற்றும் தொலைக்காட்சிகளில் குடியரசுத்தலைவர் உரைக்கு முன்பும், பின்பும்,

அணிவகுப்பில் தேசியக்கொடியை ஏந்தி வரும்போதும் தேசிய கீதத்தை உடனடியாக ஒலிக்கச் செய்ய வேண்டும் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் மின்னணு வாக்குப்பதிவு செயல்முறை விளக்க மையங்கள் மூலம் இதுவரை 81 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகங்கள் மற்றும் சார் ஆட்சியர் அலுவலகங்களில் இந்த மின்னணு வாக்குப்பதிவு எந்திர செயல்முறை விளக்கம் அளிக்கப்படுவதாக கூறியுள்ளார்.

மாநிலத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களையும் அணுகும் நோக்கத்துடன் நடமாடும் செயல் விளக்க வாகனங்கள் இயக்கப்படுவதாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் துறைமுகம் சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டிடம் மற்றும் எரிசக்தி சேமிப்புக்காக பிளாட்டினம் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

இதுகுறித்து மத்திய கப்பல் மற்றும் துறைமுகங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தூத்துக்குடி துறைமுகத்தின் நிர்வாக கட்டிடம் 100 சதவீதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியால் இயங்குவதாக கூறப்பட்டுள்ளது.

சூரியசக்தி மூலம் 89 சதவீதம் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படுவதாகவும், துறைமுகத்திற்கு வெளியே 11 சதவீதம் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பசுமைக் கட்டிட குழுமத்தால் இந்த பிளாட்டினம் அங்கீகாரம் தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய கப்பல் மற்றும் துறைமுகங்கள் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

<<<<>>>>

பங்களாதேஷில் நாடாளுமன்ற தேர்தல் இன்று நடைபெறுகிறது.

மொத்தமுள்ள 299 தொகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 42 ஆயிரத்துக்கும் அதிகமான மையங்களில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இத்தேர்தல் மாலை மணி **4.30** வரை நடைபெறுகிறது.

**12** கோடியே **77** லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தலையொட்டி பாதுகாப்பு பணியில் **9** லட்சத்து **58** ஆயிரம் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே தேர்தல் குறித்து தொலைக்காட்சியில் மக்களிடையே உரையாற்றிய பங்களாதேஷ் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. நசீருதீன், வாக்காளர்கள் அமைதியான முறையில் வாக்களிக்குமாறும், முடிவுகளை ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துமீறி செயல்படுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

<<<<>>>>

தெலங்கானாவில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் **73** சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

அதிகபட்சமாக யதத்ரி புவனகிரி மாவட்டத்தில் உள்ள **Choutuppal** பகுதியில் சுமார் **92** சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

குறைந்தபட்சமாக நல்கொண்டா மாவட்டத்தில் உள்ள நந்திகொண்டாவில் **59** சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

<<<<>>>>

ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அத்ரியான் கர்மாகர் தங்கப் பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஜூனியர் **50** மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

**25** மீட்டர் பிரிவில் இந்தியாவின் ஆடவர் ஜூனியர் அணியும் தங்கப் பதக்கம் வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **41** தங்கம் உட்பட **75** பதக்கங்களை வென்றுள்ளது.

-------------

உலக பாரா கிராண்ட் ஃப்ரீ தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் திலீப் கவிட் ஆடவர் பிரிவிலும், ப்ரீத்தி பால் மகளிர் பிரிவிலும் தங்கப்பதக்கம் வென்றனர்.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் **100** மீட்டர் ஓட்டப் பிரிவில் அவர்கள் இப்பதக்கத்தை கைப்பற்றினர்.

------------

உலக பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரேம்குமார் அலே - அல்ஃபியா ஜேம்ஸ் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நமீபியாவை எதிர்கொள்கிறது.

தில்லியில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**